196

போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

Edi... A. Lourduswami, B.A., L.T.
...Training School, Trichinopoly.

... ஒக்டோபர் 1942 மலர் 4

R. C. போதனாமுறை பாடசாலை, திருச்சினப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 1½.

JL
M211, N11PP.
H42.33.4
182361
22 OCT 1942
MADRAS

போதனை விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

பக்கம்

1. பத்திராதிபர் குறிப்புகள் 73
2. சென்னை கல்வி இலாகா 75
3. இது என்ன? விடுகவி 77
4. அணியியல் 78
5. மொழித் தேர்ச்சிக்குப் பேச்சுப் பயிற்சி 79
6. பாடக் குறிப்பு 81
7. இது என்ன? (விடுகதை) விடைகள் 82
8. பூகோளம் போதிப்பதெப்படி? 83
9. பொது அறிவு 86
10. சிமெண்ட் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது? ... 86
11. உங்களுக்குத் தெரியுமா? 88
12. சிறு கதை 88
13. யோசனைக் கணக்கு 89
14. இயற்கைப் பாடம் 90
15. குடியானவர்களுக்கான பழமொழிகள் 91
16. யுக்திக்கணக்கு, யோசனைக்கணக்கு விடைகள் ... 92
17. நம் பாடசாலை நிகழ்ச்சிகள் 93
18. பெற்றோர் சங்கங்கள் 94
19. வேடிக்கைக்கணக்கு! 94
20. பாலர் ஸங்கீதம் 95

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Imprimatur : ✠ JAMES, *Bishop of Trichinopoly.*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 OCT 1942
MADRAS

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 33] 15 ஒக்டோபர் 1942 [மலர் 4

பத்திராதிபர் குறிப்புகள்

நம் பாடசாலைதினக் கொண்டாட்டம் (Our School Day Celebrations). அறிக்கை. இக்கொண்டாட்டம் இந்த அக்டோபர்-மீ 17-ம் தேதி சனிக்கிழமையன்று கொண்டாடப் படும். வழக்கம்போல் அவ்வமயம், பந்தய விளையாட்டுகள், பரிசுவழங்கல், நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறும். சென்ற இரண்டு மூன்று வருடங்களாக நடத்திவந்ததுபோல் இந்தத்தடவையிலும், மாணவர்களது முயற்சிகளைக்கொண்டே Project Method-ஐ அனுசரித்து, நாடகம் நடத்த ஏற்பாடாகியிருக்கிறது.

ஷை வைபவங்களில் கலந்துகொள்ளவும், கண்டுகளிக்கவும் நாம் நமது சகல நேயர்களையும் வரவேற்கிறோம். விசேஷமாக நமது பழய மாணவர்கட்கு இதனை சந்தோஷத்துடன் தெரிவிக்கிறோம். பரிசு பெற்றுக்கொள்ளவிருக்கும் நம் பழய மாணவர்கள் ஷை தினத்தன்று ஆஜராவார்களென நம்புகின்றோம்.

* * * * * * * * *

விகடப்போட்டி-பூங்கோத்துப்பரிசு.—நம் "பூங்கொத்துக்கு" ஹாஸ்யம் (விகடம்) எழுதி அனுப்புவோர்க்குப் பரிசு அளிப்பதாக உத்தேசித்திருக்கிறோம். விகடம் எழுதியனுப்புபவர்கள் வரும் டிசம்பர்-மீ° முதல் தேதிக்குள் தத்தம் விலாசத்துடன் விகட விஷயத்தை எமக்கு அனுப்பிவிடவேண்டும். **மூன்று விகடங்கள்** தான் தேவை. ஏராளமாக வேண்டுவதில்லை. இங்கு வந்துசேரும் "விகடங்களுள்" எது சிலாக்கியம் என்று எங்களால் தீர்மானிக்கப்படுமோ அதுதான் **பரிசுக்கு** எடுத்துக் கொள்ளப்படும். நாம் ஏற்றுக்கொண்ட விகடத்தின் உரிமையாளருக்குத்தான் **பரிசு** உண்டு. **பரிசு ஒரு வருஷத்துக்கு "பூங்கோத்து"** இனம். நம் பூங்கொத்து நேயர்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். **பூங்கோத்து பரிசு! விகடப்போட்டி!!**

ராஜு. (தன் தம்பியைப்பார்த்து) நமது வீட்டுத் தோட்டத்தில் முன்சிப்பை வெட்டிவிட்டார்களாம்.

தம்பி. நமது கிராம முனிசிப்பையா?

ராஜு. அட பைத்தியக்காரா! வாழைமரத்தின் முன்சீப்பு இருக்கிறதல்லவா! அதைத்தான்.

M. Divianathan, Press boy.

* * *

மாமன். இதுவா போதனாவிஷயப் பூங்கொத்து?

மருமகன். ஆம், ஏன்?

மாமன். ஏன் இப்படி சிறிதாகிவிட்டது?

மருமகன். ஜப்பான்காரன் பேப்பர்களையெல்லாம் தின்று விடுகிறானாம். பேப்பர் அரிதாகாதா?

(Louis VIII Std.)

18230

சென்னை கல்வி இலாகா

T. S. L. C. பரீட்சை—1943

(T. S. L. C. Examination, March—1943)

பழய திட்டத்திற்கும் (Old Scheme) புதுத்திட்டத்திற்கும் (Revised Scheme) T. S. L. C. பரீட்சை அடுத்த 1943-ம் வருஷம் மார்ச்சு-மீ 16-ம் தேதியிலிருந்து தொடங்கி நடைபெறும் (Vide Fort St. George Gazette Page 586 dated 15th September 1942.)

* * *

T. S. L. C. Examination—1943

Elementary Higher Grade—(Old Scheme.) Text Books

1943-ல் பரீட்சை எழுதும் எலிமெண்டரி ஹையர் கிரேடு (பழய திட்டம்) மாணவர்களுக்குப் பாட புத்தகங்கள், 1941-ம் வருஷத்தில் குறித்த பாடபுத்தகங்களே.

Non-Detailed—Tamil

(1) நால்வர் சரித்திரம் (பிரிவு 4. பக்கம் 17 முதல் 28 வரையிலும் அப்பர் சரிதையும் நீங்கலாக) P. A. Bhashyam Aiyangar.

(2) ஈசுவர சந்திர வித்யாசாகர்—P. S. Rajan.

(3) கண்ணகி வரலாறும், கற்பு மாண்பும்— N. M. Venkataswamy Nattar.

(4) Heroic Kings—T. V. Ganesan.

(5) Benjamin Franklin—P. Pakkirisami Chettiar.

* * *

VIII. வகுப்பு முடிவில் ஸர்க்கார் பரீட்சை ஏப்ரல் 1943

(Public Examination at the end of VIII Standard, April—1943)

ப்ரைவேட் மாணவர்கள் மனு போடுவதற்கு நோட்டீஸ்

(Notice inviting applications for admission—Private Candidates. (vide Page 609 & 610 of Fort St. George Gazette, dated 29th September 1942.)

VIII வகுப்பு முடிவில் ஸர்க்கார் பரீட்சை 1943-ம் ௵ எப்ரல்-௴ நடைபெறும். அதற்கு ப்ரைவேட் மாணவர்கள் பின் வருவனவற்றைக் கவனித்து, மனு (application) போடக்கடவர் :— பரீட்சை எழுத லாயக்குள்ளவர்கள் I. VIII வகுப்பு தேறியதாக கல்வி இலாகா அதிகாரிகளால் அளிக்கப்பட்ட E. S. L. C. ஸர்ட்டிபிக்கேட் பெற்றுள்ளவர்கள் ப்ரைவேட் மாணவர்களாக ஷை பரீட்சை எழுதலாம்.

II. சென்ற 1942-ம் வருஷத்தில் ஷை பரீட்சை எழுதித் தவறிப் போனவர்கள் திரும்பவும் எழுதலாம். ஆனால் அவர்கள் மறுபடியும் எல்லாப்பாடங்களிலும்—மூன்று பாடங்களிலும்—பரீட்சை எழுத வேண்டும்.

பரீட்சை எழுத லாயக்கற்றவர்கள்—டெப்யூடி இன்ஸ்பெக்டர் அல்லது ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்ட்ரெஸ் (பெண்கள் மட்டில்) இவர்களால் நடத்தப்பட்ட VIII வகுப்பு முடிவு பரீட்சையில் தேறுதவர்கள் "ப்ரைவேட்" மாணவர்களாக ஷை பரீட்சை எழுத அனுமதி இல்லை.

அவ்வாறே, செக்கண்டரி பாடசாலை III, IV, V பாரங்களிலிருந்து மேல் வகுப்புக்கு மாற்றினதான டிரான்ஸ்பர் ஸர்டிபிக்கேட் (Transfer Certificate) பெற்றிருந்தாலும்கூட ஷை பரீட்சையில் "ப்ரைவேட்" மாணுக்கர்களாகப் பரீட்சை எழுதக்கூடாது.

* * * * * * * * *

பாடம், பாடதிட்டம் முதலியன—கீழ்வரும் பாடங்களில் மாணவர்கள் பரீட்சை எழுதவேண்டும் :—(1) பாஷை. (2) ஆரம்ப கணிதம். (3) சரித்திரம் ; பூகோளம் ; அரசியல் நூல்.

VI வகுப்பு முதல் VIII வகுப்பு முடிய, பாடத் திட்டத்தில் உள்ள பாடங்களில் பரீட்சை உண்டு. பூகோள பாடத்திட்டம் 1941-1942-ல் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், இப் பாடத்தில் பரீட்சைக் கேள்விகள் பழய திட்டத்தின்படியும், புதுத் திட்டத்தின்படியும் கேட்கப்பட்டிருக்கும். ஆதலால், மாணவர்கள் எந்தத் திட்டத்தின்படியும் விடை எழுதலாம்.

கட்டணம், மனு தேதி முதலியன.—ஷை பரீட்சைக்குக் கட்டணம் ரூ. 1-8-0. அப்ளிகேஷன் பாரங்களை அந்தந்த டெப்யூடி இன்ஸ்பெக்டரிடமிருந்தாவது, பெண்கள் மட்டில், ஸப்-அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்ட்ரெஸிடமிருந்தாவது பெற்றுக்கொள்ளத்தகும். மனுக்களை 1942-ம் ௵ நவம்பர்-௴ 30-ம் தேதிக்குள் நேராய் கமிஷனருக்கு அனுப்பிவிடவேண்டும். அனுப்பும்போது, ஷை மனுவுடன், பணம் கட்டினதற்கு ட்ரஷரி ரசீதும் (Treasury receipt) எலிமென்

டரி ஸ்கூல் லீவிங் ஸர்ட்டிபிக்கேட்டும் (Elementary School Leaving Certificate) சேர்த்து அனுப்பவேண்டும். சென்ற 1942-ம் வருஷத்தில் பரீட்சை எழுதித் தவறிப்போனவர்கள் விஷயத்தில், அவரவர்களது ரெஜிஸ்டர் நீ (சென்ற வருஷத்தியது) பரீட்சை எழுதின ஸெண்டர் (Centre), ஜில்லா முதலிய விவரங்களை எழுதி அனுப்பவேண்டும்.

ஷை மனு, முதலியன அடங்கிய கவரில்—தலைப்பில்—பின்வருமாறு எழுதி, கமிஷனருக்கு அனுப்பவேண்டும்:—

"Application for Admission to the VIII Standard Public Examination—Private Candidate"

To, The Secretary to the Commissioner
for Government Examinations,
Cathedral Post Office,
MADRAS.

இது என்ன?

(விடுகவி)

1. பூக்கும்போது கறுப்பு; எடுக்கும்போது சிவப்பு!
2. தோல் காய்கிறது; கறி வேகுகிறது; மாடு மேய்கிறது!
3. இத்தனையுண்டு சிட்டுக்குருவி, இழுத்து இழுத்து முள்ளடைகிறது.

S. K. Lourdusamy, E. I. A.

4. குடல் இல்லாத பிராமணன் கூப்பிட்டுக்கூப்பிட்டு அழைக்கிறான்.
5. அரைப்படி கல் பொறுக்கி அற்புதமான கோட்டை கட்டி ஒருவன் கண்பட்டு உடைந்ததாம் தெப்பக்குளம்.
6. ஓடுதாம் இரண்டு குருவிகள்; உட்காருதாம் இரண்டு குருவிகள், தண்ணீரைக்கண்டு தவிக்குதாம் இரண்டு குருவிகள்.

E. Thathan, E. I. B.

அணியியல்

(M. A. S. Udaiyar, Tamil Pundit.)

தற்குறிப்பேற்றவணி :—

உலகின்கட்டோன்றிய இருதிணைப் (உயர்திணை, அஃறிணை) பொருள்களுள் யாதாயினுமொரு பொருட்கியல்பினுண்டாகிய தன்மையை நீக்கி அதற்குப் பிறிதொரு காரணத்தைத்தான் கற்பித்து அக்காரணத்தாலிஃதுண்டாயதெனக்கூறி அதனையப் பொருண்மீது ஏற்றிப் புலவன் தன் சாமர்த்தியத்தாற் கூறுவதே தற்குறிப்பேற்றமென்னும் அணியாகும்.

உதாரணம் :—

"எண்டருங்கடைசென்ற யாமமியம்புகின்றன ஏழையால்
வண்டுதங்கிய தொங்கல்மார்பன் மயங்கிவிம்மியவாறெலாம்
கண்டு நெஞ்சுகலங்கியஞ்சிறையான காமர்துணைக்கரங்
கொண்டுதம்வயிறெற்றியெற்றி விளிப்பபோன்றன கோழியே"

என வரும் கம்பர் வாக்கினுள் வைகறைப் போதில் இயல்பிலேயே கூவுங் கோழியின் கூவுதலைத் தயரதன் கைகேயியின் கைதவத்தால் மயங்கி முறைபிறழ அரசளித்து உயிர்போன்ற முதன்மகனை இராமற்குப் பதினன்கியாண்டு காட்டிருக்கையளித்து அவன் பிரிவால் தன்னுவி பிறிவுறுமென்றஞ்சி மயங்கிய துணராது ஆநந்தப்பெருக்காற் களித்துத் துயிலுமாந்தரை எழுப்புவதாகத் தமதாற்றலாற் கூறியமை நோக்கற்குரியது.

இதன் விளக்கம் :—பண்டும் பண்டுங் கழிந்த நாட்களிலெல்லாம் ஓருயிர் ஈருடலாகவெண்ணி நாயகன் மனங்கோணுது குறிப்பறிந்தொழுகியின்று அழகுமிக்க தோளையுடைய அக்கணவன் உரைத்தற்கரிய துயரெய்தவும் சிறிதும் மனமிரங்காதவளும் ஒளி பொருந்திய பற்களையுடையவளுமாகிய கைகேயியின் செயலையும் மன்னவனது மனக்கலக்கத்தையுங் கண்டு தன் மனது கலங்கி அழகாகிய தனது சிறகாகிய இரு கரங்களினுலும் வயிற்றில் அடித்துக்கொண்டு ஓலமிட்டு மற்றவர்களை அழைப்பனபோன்றன வைகறையில் கூவுங் கோழியின் குரல் என்பது. இவ்வாறே பிறவுங்கொள்க.

மொழித் தேர்ச்சிக்குப் பேச்சுப் பயிற்சி

ஆரம்பப் பாடசாலைகளில் மற்றையப் பாடங்களைக் காட்டிலும் பாஷைப்பாடம் முக்கியமானது. ஆனதுபற்றி முதன்மை இடம் இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாணுக்கர்களது மொழித்தேர்ச்சி நமது முக்கிய நோக்கம். மொழித்தேர்ச்சியில் பேச்சு, வாசிப்பு, எழுத்துவேலை என்ற அம்சங்கள் அடங்கும். அதில் பேச்சுதான் முதலில் கவனிக்கப்படவேண்டுமென்பது இப்போது சித்தாந்தம். ஆராய்ந்தால் இதன் உண்மை விளங்கும். அனுஷ்டானத்தில் இருக்கிற ஆரம்பப்பாடசாலைப் பாடத்திட்டத்தில்—பாஷையைப்பற்றிய குறிப்புகளில் பேச்சுப்பயிற்சி வெகுவாய் வற்புறுத்தப்பட்டிருக்கிறதல்லவா? காரணம் என்ன?

வாழ்க்கையில் நடைமுறையில், மக்கள் சாதிக்கவேண்டிய காரியங்களில் 90% நேர்முகமாய்—பேச்சின்மூலமாய் அல்லவா? குழந்தைகளைப் பிற்கால வாழ்க்கைக்குத் தயாரிப்பதல்லவா, ஆரம்பக் கல்வியின் ஒரு முக்கிய நோக்கம்! எனவே, பேச்சுப்பயிற்சி வாழ்க்கைக்கு எவ்வளவு அவசியம் எனக்கூறவும் வேண்டுமோ!

பாஷைப்பாடத்தில் பேச்சுப்பயிற்சி எவ்வாறு அளிப்பதென்பதைப்பற்றி நமது பாடத்திட்டம் கூறுகிறது. ஆனல், நாம் அனுஷ்டிக்கவேண்டும்.

கீழ் வகுப்புகளில் பேச்சுப்பயிற்சிக்கான விஷயங்களைத் தேர்ந்தெடுத்து ஜாபிதா செய்துகொள்ளவேண்டும். முதல் வகுப்பில் தொடக்கத்திலிருந்தே பேச்சுப்பயிற்சி படிப்படியாய்க் கொடுத்துவரவேண்டும். பாடபுத்தகத்தில் உடனே "பிரமை" வேண்டாம். இரண்டொரு மாதங்கள் சென்றபிறகு கூட பாட புத்தகம் ஆரம்பிக்கலாம். லாபமேயொழிய நஷ்டமில்லை.

எதைப்பற்றிப் பேசுவது? எப்படிப் பேசுவது? யார் பேசுவது? இந்தப்ரச்சனைகள் பாடத்திட்டத்தில் ஒருவாறு விளக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை இங்கு மீண்டும் கூறத்தேவையில்லை. ஆனல் ஆசிரியர்கள் பாடத்திட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட குறிப்புகளைக் கூர்ந்து பார்க்கும்படி ஞாபகப்படுத்தவே இக்கட்டுரை கோருகிறது.

பிள்ளைகள் பேசவேண்டும். ஆசிரியர் பேசத்தூண்டி, துணைநின்று, திருத்தி, உற்சாகப்படுத்தி மேலும் மேலும் அவர்கள் நன்கு பேசும்படி ஊக்கவேண்டும்.

முதலில் சம்பாஷணைகள். வீடு, பள்ளிக்கூடம், பிள்ளைகளின் சுற்றுப்புறம், இவற்றைப்பற்றி ப்ரஸ்தாபிக்கவேண்டியதுதான். கூச்சம் தெளிந்த பிள்ளைகள் சளபுளவென ஆரம்பித்து

விடுவார்கள். கொச்சைச் சொற்கள், குறைமொழிகள், தடுமாறு தல்கள் எல்லாம் காணப்படும். ஆசிரியருக்கு உடனே வேலை தொடங்கும்.

பிள்ளைகளது சொற்கள் மழலைச் சொற்களென்றும், பயிலாத சொற்களென்றும் மதித்து, ஆயாசப்படாமல் அன்புகூர்ந்து திருத்தவேண்டும். பேசப் பயப்படமாட்டார்கள். திருத்திக் கொள்ள முயலுவார்கள்.

உற்சாகம் ஏற்பட, அழகிய பொருள்கள், படங்கள் முதலிய உபகரணங்கள் வேண்டும். பாடத்திட்டத்தில் உபகரணங்களைப் பற்றியும் அனுபவ சித்த வேலைகளைப்பற்றியும் பல கூறப்பட்டுள்ளன. பிள்ளைகளின் சூழ்நிலை, சுற்றுப்புறம் பயிற்சிக்கு அனுகூலம். நமது கவனம் பிள்ளைகளின் முன்னறிவில் முதலில் செல்லவேண்டும். அதுபற்றியே, அவர்களுக்குத் தெரிந்ததைப் பற்றிப் பேச்சுப் பயிற்சியைத் தொடங்குகிறோம்.

பேச்சுப் பயிற்சியில் மேற்கூறியபடி., சம்பாஷணை மூலமாய், சிறுவாக்கியம், சிறுவாக்கியங்கள், தொடர் வாக்கியங்கள் படிப் படியாய்ப் பேசப் பழக வேண்டும். இதில் ஒரு முக்கிய விஷயம் திருத்தமாய்ப் பேசுதல். தெளிவாய்ப் பேசுதல். இதைத்தான் உச்சரிப்பு சுத்தம் என்போம். பிள்ளைகள் சகஜமாய்க்கூறும் உச்சரிப்பு பேதங்கள் எவை என நமக்குத் தெரியும். தெரியவேண்டும். விசேஷமாய் ல, ள, ழ, ன, ண, முதலிய எழுத்துக்கள் வரும் மொழிகளே. எனவே, அவற்றைக் கவனித்துத் திருத்தவேண்டும். ஒவ்வொருநாளும் சம்பாஷணை முக்கியமாய்க் கீழ் வகுப்புகளில் சிறிதுநேரம் நடைபெறட்டும். சிறுவர்கள் தாமே பேச சந்தர்ப்பங்கள் அமைத்துத் தருவோமாக. ஆனால் சாதுரியமாக சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். இன்ன, இன்ன விஷயம் என்று நாமே ஏற்கனவே தீர்மானம்செய்து வைத்துக்கொண்டிருக்க வேண்டும். அதுதான் நமது பாடக்குறிப்பின் முக்கிய அம்சம்.

பிள்ளைகள் பேசித் தேர்ச்சிபெற்று வருவதற்கு அத்தாட்சியாக நாம் என்ன ஏற்பாடு செய்துகொள்ளுவது? பிள்ளைகளது மொழி வளர்ச்சியைப்பற்றி நாம் எப்படி கணக்கு வைத்துக் கொள்ளுவது? எத்தனை புதுமொழிகளைத் திருத்தமாய்க் கற்றிருக்கிறார்கள்? இவைபோன்ற ப்ரச்சனைகளையும் ஆராய்ந்து தீர்மானிப்பது நமது கடமை. மொழித்தேர்ச்சிக்குப் பேச்சு முக்கியம். இது முதல் வேலை. அதோடு வாசிப்பும், எழுத்துவேலையும் சேரவேண்டும். இது வேறு விஷயம். ஆராயவேண்டும்.

பாடக் குறிப்பு

பாடம்:—சரித்திரம். வகுப்பு IV. நேரம் 40 நி.

நோக்கம்:—பிருதிவிராஜன் சரிதை கூறல்.

உபகரணங்கள்:—நமது தேசப்படம். பிருதிவிராஜன் படம். அக்காலத்திய யுத்த ஆயுதங்கள்.

பீடிகை:—உபா. பிள்ளைகளுடன் உற்சாகமாகச் சம்பாஷித்து ஹர்ஷர் வட இந்தியாவை ஆண்ட பல வருடங்களுக்குப் பின் டில்லியில் ஒரு ரஜபுத்திர அரசர் ஆண்டார். அவர்தான் பிருதிவி ராஜன் என்று தொடங்கி, அவரது வீரச்செயல், குணதிசயங்களைப்பற்றிப் படிக்கப்போவதாகக் கூறவும்.

விஷயம்:—பிருதிவிராஜன் ஒரு ரஜபுத்திர வீரன். க்ஷத்திரிய குலத்தவன். நமது தேசத்தின் மீது படை எடுத்த முகம்மதியர்களை எதிர்த்தவன். சிறந்த பலசாலி. யுத்தப்பிரியன். அவர் ஆஜமீர், டெல்லி முதலிய ராஜ்யங்களை ஆண்டார். அவருடைய புகழ் எங்கும் பரவிற்று.

ஜயசந்திரன் கன்னோசியில் ஆண்ட மற்றொரு ரஜபுத்திர அரசன். பிருதிவியின் வீரத்தில் பொறாமை கொண்டார். அவருடைய பொறாமை வெறுப்பாக மாறியது. அதனால் பிருதிவியை அவமானப்படுத்த எண்ணினார். தமது ஏக புத்திரி சம்யுக்தையின் சுயம் வரத்திற்கு பிருதிவிக்கு அழைப்பில்லை. ஆனால் சம்யுக்தைக்கு பிருதிவியையே மணந்துகொள்ள ஆசை. இதை அறிந்த பிருதிவி சம்யுக்தையை மணம்புரிய தீர்மானித்தார். சுயம்வரத்தன்று பிருதிவி மாறுவேடம்பூண்டு சம்யுக்தையை தூக்கிச் செல்லுதல்.

ஜயசந்திரன் பிருதிவியை முகமதியர்களிடம் காட்டிக் கொடுத்தல். அதனால் ரஜபுத்திர வம்சத்தின் பெருமை அடியோடு அழிந்தது.

முறை:—நமது தேசப்படத்தில் வட இந்தியாவைக் காண்பித்து ஹர்ஷர் காலத்தில் அதன் பெருமையைக் கூறி, பின் பிருதிவிராஜனின் படத்தையும் அவனுடைய யுத்த ஆயுதங்களையும் காட்டி அவனுடைய குணதிசயங்களையும் வீரச் செயல்களையும் வருவித்தும் விளக்கியும் காண்பித்தல்.

(N. B.) சுயம்வரம் என்னவென்பதையும் விவரிக்க.

அப்பியாசம் :—பிருதிவி ஆண்ட ராஜ்யங்கள் எவை? அவருக்கு விரோதியாக இருந்த அரசர் யார்? அவர்களுக்குள் விரோதம் ஏற்படக் காரணம் என்ன? ஜயசந்திரன் பிருதிவியை எவ்விதம் அவமானப் படுத்தினன்? சுயம்வரத்தன்று நடந்த சம்பவம் என்ன? ரஜபுத்திர வம்சம் அடியோடு அழிவதற்கு காரணம் என்ன?

கரும்பலகை சுருக்கம் :—பிருதிவிராஜன் டில்லியில் அரசாண்ட ஒரு ரஜபுத்திர வீரன். க்ஷத்திரிய குலத்தவன். இந்தியாவின்மீது படை எடுத்த முகமதியர்களை எதிர்த்தவன். ஜயசந்திரன் கன்னோசி அரசன் பிருதிவியின் வீரத்தில் பொறாமை கொண்டார். சம்யுக்தையின் சுயம்வரத்தன்று பிருதிவியை அவமானப்படுத்தினர். பிருதிவி சம்யுக்தையை தூக்கிச் சென்றார். ஜயசந்திரன் பிருதிவியை முகம்மதியர்களிடம் காட்டிக்கொடுத்தார். ரஜபுத்திர வம்ச பெருமை அடியோடு அழிந்தது.

இது என்ன? (விடுகதை) விடைகள்

(கொத்து 33, மலர் 3, பக்கம் 61.)

1. சூரியன். 2. மனிதர் (மூன்று பருவங்கள்). 3. காகிதத்தில் வரையப்பட்ட எழுத்துக்கள். 4. கதவு. 5. நக்ஷத்திரங்கள். 6. எழுத்து.

ஷை விடையளித்தவர்கள் :—(1) S. Joseph Simson. (2) S. Mariasusai. (3) V. Rajagopalan. (4) S. Arokiasamy. (5) S. Sengol.

உபாத்தியாயர். தம்பி! வலை என்பதென்ன?

மாணிக்கன். ஸார்! அநேக துவாரங்களை ஒன்றாகச் சேர்த்து தைத்திருப்பதே வலை.

U. A. Das Udaiyar.

பூகோளம் போதிப்பதெப்படி?

(I. Anthony)

(கொத்து 33, மலர் 3, பக்கம் 61-ன் தொடர்ச்சி.)

இது வரை நாம் பூகோள பாடம் போதிப்பதைப்பற்றி பார்த்தோம். இனி இப்பாடபோதனையில் உபயோகப்படும் உபகரணங்களைப்பற்றிச் சிறிது தெரிந்துகொள்வோம். நாம் உயிர் வாழ்வதற்குக் காற்று எவ்விதம் அவசியமோ, அவ்விதமே பூகோள போதனைக்கு உபகரணங்கள் அவசியம். சரியான உபகரணங்களின்றி போதிக்கப்படும் பூகோள பாடத்தில் பிள்ளைகள் முழு அறிவையும் பெறுவார்களென்று எதிர்பார்க்கமுடியாது. எனவே இப்பூகோள போதனையில் உபயோகப்படும் உபகரணங்களைப் பற்றியும், அவற்றை எங்கு, எப்பொழுது, எப்படி கையாண்டு பாடம் போதிக்கவேண்டுமென்பதைப்பற்றியும் நாம் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

பூகோள பாடம் போதிக்கும்போது உபயோகப்படும் உபகரணங்களில் முக்கியமானவைகள் மூன்ருகும். அவைகளாவன:—(1) தேசப்படங்கள் (2) மாதிரி உருவங்கள் (3) புகைப்படங்கள் (Photo) இவைகள் ஒவ்வொன்றையும் எவ்விதம் கையாண்டு பாடம் போதிக்கவேண்டுமென்பதைப்பற்றி இனி பார்ப்போம்.

1. தேசப்படங்கள் :—பூகோள பாடபோதனையில் உபயோகப்படும் உபகரணங்களில் அதிமுக்கியமானதும், முன்னணியில் நிற்பதும் தேசப்படமேயாகும். தேசப்படமே பூகோள பாடத்தின் உயிர்நாடி. தேசப்படம் இல்லையேல் பூகோள பாடமும் இல்லை. நாம் பக்கம் பக்கமாக எழுதியோ அல்லது மணிக்கணக்கில் பேசியோ பூகோள அறிவை யூட்டுவதைக்காட்டிலும் ஒரு சிறு தேசப்படத்தின் மூலம் அநேக விஷயங்களை அறிவிக்கலாமென்று அறிந்தோர் கூறுவர். லக்ஷகணக்கான மைல்களுக்கப்பாலுள்ள இடங்களையும், மலைகளையும், நதிகளையும் தேசப்படத்தின்மூலம் நம் கண்ணெதிரே கொண்டு வரமுடியும். பற்பல இடங்களுக்குச் செல்லும் மூவகை மார்க்கங்களையும் தேசப்படத்தின் உதவியால் தெரிந்துகொள்ளலாம். எனவே தேசப்படத்தை 'பூகோள பாடத்தின் பூதக் கண்ணுடி' என்றும் ஒரு விதத்தில் கூறலாம். மேற் கூறிய காரணங்களினுல்தான் தேசப்

படமானது பூகோள பாடத்தில் முதன்மை ஸ்தானம் பெற்று விளங்குகிறது.

பூகோள பாடம் நிரந்தரமாக ஆரம்பிப்பது மூன்றும் வகுப்பில்தானென்று முன்பே கூறியிருக்கிறோமல்லவா? இவ்வகுப்பில்தான் மாணவர்கள் தேசப்படம் வரைவதற்கு அடிப்படை அறிவாகிய தரைப்படம் வரையும் விதத்தை கற்றுக்கொள்ளுகிறார்கள். முதலில் வகுப்பறையின் தரைப்படத்தைத் திசைகளுடன் வரைந்து அதில் ஆசிரியர் அமரும் இடம், குறிப்பிட்ட ஒரு மாணவனின் இடம் முதலியவற்றைக் குறித்துக் காட்டி, அதே போல் மாணவர்களை வரையும்படி செய்யலாம். பின்பு பள்ளிக்கூடம், பள்ளிக்கூடத்தைச் சுற்றியுள்ள இடம், பள்ளிக்கூடம் அமைந்துள்ள கிராமம் முதலியவைகளின் தரைப்படங்களை வரையும் விதத்தையும் படிப்படியாகக் கற்றுக்கொடுக்கலாம். இவ்விதம் தரைப்படம் வரைவதற்கு குறிப்பிட்ட அளவுகள் இவ்வகுப்பிற்குத் தேவையில்லை. நான்காம் வகுப்பில்தான் மாணவர்கள் தேசப்படத்தைப்பற்றிய உண்மையான அறிவை அடைகின்றனர். தேசப்படங்களில் காணப்படும் நிற வித்தியாசங்களையும் எந்தெந்த நிறங்கள் எந்தெந்த பிரதேசங்களைக் குறிக்கின்றனவென்றும் இவ்வகுப்பு மாணவர்களுக்குப் போதிக்கவேண்டும். மேலும், மலைகள், சமவெளிகள், பீடபூமிகள், நதிகள், ஏரிகள், சமுத்திரங்கள், பாலைவனங்கள் முதலியவைகள் என்னென்ன நிறங்களால் காட்டப்பட்டுள்ளன வென்றும், இருப்புப்பாதைகள், சாலைகள், பெரிய, சிறிய நகரங்கள் முதலியன எவ்விதம் காட்டப்பட்டுள்ளனவென்றும் போதித்தல் வேண்டும். நாம் சொல்வதுடன் நில்லாமல் நமது சாதனையாலும் அதைக்காட்ட வேண்டும். நாம் வரையும் தேசப்படங்களில் நாம் போதித்த முறையே அநுசரிக்கப்படல் வேண்டும். 5-ம் வகுப்பில் மாணவர்கள் தேசப்படங்களை சுமாராக வரையவும், அவற்றில் சில முக்கிய இடங்களைக் குறிக்கவும் கற்றுக்கொள்கின்றனர்.

ஆறும் வகுப்பு மாணவர்கள் தரைப்படத்தை அளவுகளுடன் வரையும் விதத்தைக் கற்றுக்கொள்கின்றனர். ஏழாம் வகுப்பில் மாணவர்களுக்கு அக்ஷ, தீர்க்க ரேகைகள் என்றால் என்னவென்றும், அவைகள் பூமியின்மேல் எவ்விதம், எக்கணக்கில், ஏன் வரையப்பட்டிருக்கின்றன வென்றும் போதித்தல் வேண்டும். பின்பு இந்த ரேகைகளின் உதவியால் எப்படி தேசப்படங்

களில் இடங்களை நிர்ணயிப்ப தென்றும் எடுத்துக்கூறவேண்டும். (இரண்டு ரேகைகள்—அக்ஷ, தீர்க்க—சந்திக்கும் இடம். (உ. ம்). $23\frac{1}{2}°$ வ. அக்ஷரேகையும், $80°$ கி. தீர்க்க ரேகையும் சந்திக்கும் இடத்தில் ஜபல்பூர் உள்ளது. இவற்றை தேசப்பட புத்தகத்தில் கொடுத்துள்ள அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்) இவ்வறிவை மாணவர்கள் அடைந்ததும், பாடத்தில் வரும் நகரங்களையோ, மலைகளையோ, நதிகளையோ, அவர்களாகவே தேடிக் கண்டுபிடிக்கச் செய்யவேண்டும். ஏனெனில் அவர்களாகத் தேடிக் கண்டதை சுலபத்தில் மறக்கமாட்டார்கள். அடுத்த நாள் நடத்தப்போகும் பாடத்தை முந்தின இரவே மாணவர்கள் தங்கள் வீட்டில் படித்து, அதில் வரும் இடங்களை தேசப்படத்தில் கண்டுபிடித்துக்கொண்டு வரும்படி செய்யவேண்டும். இதற்கு ஒவ்வொரு மாணவனும் ஒரு தேசப் பட புத்தகம் வைத்திருத்தல் வேண்டும். தேசப் பட புத்தகம் வாங்குவது வீண் செலவாகாது.

அடுத்த நாள் பாடத்திற்கு நாம் ஆயத்தம் செய்யும்போது ஒரு தேச படமும் தயார் செய்யவேண்டும். இப்படம் தயார் செய்யும்போது கீழ்வரும் விஷயங்கள் நம் ஞாபகத்தில் இருக்க வேண்டும்.

(1) படமானது பெரியதாகவும், அழகாகவும் மாணவர் மனதைக் கவரும் தன்மையில் வரையப்படவேண்டும்.

(2) படமானது சரியான அளவில் வரையப்படுவதுடன், நகரங்கள், மலைகள், நதிகள், முதலியன சரியான இடங்களில் குறிக்கப்படல்வேண்டும்.

(3) படத்திற்கு நாம் தீட்டும் வர்ணம் நியாயத்திற்குகந்ததாயிருக்கவேண்டும். அதாவது எந்தெந்த பிரதேசங்களுக்கு எந்தெந்த வர்ணங்களை உபயோகிக்கவேண்டுமோ, அந்தந்தப் பிரதேசங்களுக்கு அந்தந்த வர்ணங்களையே உபயோகிக்கவேண்டும்.

தமிழ்நாடு அரசு ... நூலகம்
182301
சென்னை-600

பொது அறிவு

(U. A. Das Udayar)

மிகக் கஷ்டத்தையும் சமாளிக்கும் பூச்சி எது?

இக்கேள்விக்குப் பதில் கூறுவது சிறிது சிரமம். எனினும் ஆராய்ச்சியாளர் அப்படிப்பட்ட பூச்சி எறும்பு என்று திடமாய்க் கூறுகின்றனர். அதற்கு அத்தாட்சியாக அவர்கள் கூறும் சில உண்மைகளாவன.

ஓர் நிலப்பாகம் ஜலத்தால் நிறைந்திருக்கின்றது. வெள்ளமும் நாளாவட்டத்தில் குறைகின்றது. இறுதியில் பல பிராணிகள் அழிய சிலமட்டும் உயிருடன் வெளியில் உலவும். அவற்றுள் எறும்பு ஒன்றாகும்.

ஓர் விளைச்சலில் நெருப்பு வைக்கப்பட்டுவிட்டது. கடைசியில் ஓர் பிராணியும் உயிருடன் வெளியேறா. ஆனால் அச்சமயத்தும் சாம்பலின் மத்தியினின்றும் வெளிவருவது எறும்பு.

குளிர்ப்பிரதேசங்களில் உறைபனி பூமியை மாதக்கணக்காய் மூடிவிடுகின்றது. வேனிற்காலத்தில் பனியும் உருகி தரை தென்படுகின்றது. அக்காலத்தும் இறுதியாய் எறும்பு வெளியேறுகின்றது.

இந்த எறும்புகள் மாதக்கணக்காகவும் பட்டினிக் கிடக்கக் கூடும். மாறுபட்ட கோர சீதோஷ்ணத்தையும் அனுபவிக்கக் கூடும். அநேக நாட்கள் தண்ணீருக்கடியிலும், உயிர் வாழக் கூடும். சகிப்புத்தன்மை, சமாளிக்கும் தன்மையில் எறும்புகட்கு நிகராக, இவ்வுலகின்கண் வேறெதுவும் கிடையாது. அவைகளின் ஆயுள் மற்ற புழுப்பூச்சிகளினுடையதைவிட நீண்டது. வேலைசெய்யும் எறும்புகள் 6 ஆண்டுகளும், இராணி எறும்புகளோ 9 அல்லது 10 ஆண்டுகளும் உலகில் உயிர்வாழும் தன்மையுள்ளனவாம்.

சிமெண்ட் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது

A. Rayappan.

சிமெண்ட் (Cement) உற்பத்தி செய்யப்படும் விதத்தை தொழிற்சாலைக்குச் சென்று நிதர்சனமாகக் காணும் சந்தர்ப்பம் எமக்குக்கிடைத்தது. அங்கே, மலைகளிலிருந்து உடைக்கப்பட்ட மிருதுவான துண்டுக் கற்களை Trucks என்ற சிறு வண்டிகளில் ஏற்றி தொழிற்சாலைக்குக் கொண்டு வருகிறார்கள். குறிப்பிட்ட இடத்தில் ஒவ்வொரு ட்ரக்காக நிறுத்தப்பட அவற்றில் உள்ள

கற்கள், பக்கத்திலமைக்கப்பட்டிருக்கும், மேல் இழுக்கும் தொடர்ச்சக்கர இரும்புத் தடுக்குகளில் தனித் தனியாகக் கொட்டப்படுகிறது. பிறகு அங்கிருந்து மின்சார சக்தியால் இழுக்கப்பட்டு உருண்டோடும் பிரமாண்டமான உருளையில் மறு படியும் கொட்டப்பட்டு சிறுசிறு துண்டுகளாகவும் தூளாகவும் உடைக்கப்படுகிறது. உடைக்கப்பட்ட துண்டும் தூளும் பெரும் குழாய்களின் வழியாக மேல் நோக்கி உறிஞ்சப்பட்டு தொழிற்சாலையினருகில் உள்ள, தரைமட்டமாயிருக்கும் திறந்த வெளியில் கொட்டப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தூளையும் சிறிய கற்களையும் உயரே அமைக்கப்பட்டிருக்கும் இரும்பு சல்லடைத் தட்டுகளில் சேர்க்க, தொழிற்சாலையின் உச்சி யிலிருந்து பெரிய இரும்புக் கோப்பைகளை உடைய இயந்திரம் ஒன்று கீழே இறக்கப்பட்டதும் இருபிளவாகி கீழேகிடக்கும் தூளை தானே அள்ளி நிரப்பிக்கொள்ள மெதுவாக மேல் இழுக்கப் பட்டு சல்லடைத் தட்டுகளில் தூள், கற்களைக்கொட்டுகிறது. இவ்வியந்திரம் குறிக்கப்பட்ட நேரம் வரையில்தான் வேலை செய் யும். பிறகு உச்சிக்கு இழுக்கப்பட்டதும் இளைப்பாறும். சலிக்கப் பட்டத் தூளோடு வேண்டியளவு இரும்பு, அலுமீனியம், ஜிப்சம் முதலியப் பொருள்களை விகிதப்படி சேர்த்து தயார்செய்யப்படு கிறது. பிறகு அவற்றை, அடுத்தமைக்கப்பட்டிருக்கும் நீண்ட குழாய்கள் உறிஞ்சி, மேல்நோக்கிச்சென்று மறு பகுதியில் உள்ள பெரிய துரிதமாக ஓடும் உருளையில் கொட்டுகின்றன. அங்கே அளவுப்படித் தண்ணீர்சேர்த்து அக்கினி பிரவாகத்தினிடையே மேற்சொன்ன உருளையில் வறுக்கிறார்கள்—இக் காட்சியைப் பார்க்கவேண்டுமானால் செந்நிற தடித்த கண்ணாடியினுதவியால் பார்க்க முடியும். வறுக்கப்பட்டபிறகு கடினமான சாம்பல் நிற சிறு சிறு உருண்டைகளே கிடைக்கின்றன. மறுபடியும் இவ் வுருண்டைகள் குழாய்களின் உதவியால் தொழிற்சாலையின் மறு பகுதியில் உள்ள உருளையில் கொட்டப்பட்டு, தெள்ளிய தூளாக நசுக்கப்பட்டு குழாய்களின் வழியாக வெளி வருகிறது. அதுவே சிமெண்ட். பிறகு எடைப்போட்டு விற்பனைக்குத் தயார் செய் கிறார்கள்.

கடும் உஷ்ணமும் யந்திர இறைச்சலும் போட்டியிடும் தொழிற்சாலைக்குள் சென்ற கற்களை, மாடமாளிகைகளுக்கும் இன்றியமையாத சிமெண்ட்டாக மாற்றின மின்சாரத்தின் சக்தி தான் என்னே!

உங்களுக்குத் தெரியுமா ?

A. A. Muthu.

எதை, எதை என்று ஆயிரங்கேள்விகள் உங்கள் மனதில் இந்நேரம் எழுந்திருக்கும்! பசும்பாலிலிருந்து எடுக்கப்படும் பொருள்கள் நமது தேகத்தின் எவ்வெப் பாகங்களை வளர்க்கின்ற தென்று உங்களுக்குத் தெரியுமா என்றுதான் கேட்கவந்தேன்.

பாலை உறைகுத்திச் சிறிதுநேரம் வைத்தால் அது மூன்று பாகங்களாகப் பிரிகிறது.

1. ஆடை : இது மேல்வந்து மிதக்கும் பதார்த்தம். இது பாலில் கலந்திருக்கும் வெண்ணெய். இது எண்ணெய் பதார்த்தத்தில் சேர்ந்த வஸ்து. எரியக்கூடியது. ஆகாரத்தில் சேர்த்து உட்கொண்டால் தேகத்திற்கு உஷ்ணம் உண்டாகும். கால், கை முதலிய உறுப்புகளை நகரச்செய்யும் சக்தி இந்த உஷ்ணத்தினால் தான் உண்டாகிறது.

2. தயிர் : ஆடையின் கீழ் இருப்பது தயிர். இது மாம்ஸத்தை வளர்க்கும் பதார்த்தம். இதை ஆகாரத்துடன் சேர்த்து சாப்பிட்டால் தேகம் சதைபோட்டு வளரும்.

3. மோர் : தயிரின் கீழ் தங்கியிருப்பது மோர். சுத்தமான மோரில் தயிர்க்கட்டிகளின் சிறு துணுக்குகள் (whey) மிதந்துகொண்டிரா. இந்த மோரில், எலும்பு, பல், நகம், முதலியவற்றை வளர்க்கும் உப்புகள் கரைந்துள்ளன.

4. தித்திப்புப் பதார்த்தம் : பாலிலுள்ள தித்திப்பு புளிப்பாகமாறி வெண்ணெயிலும், மோரிலும், தெரியும். இது ஒருவித சர்க்கரை. இது பாலிலிருந்து தனியாய்ப் பிரிவு படுகிறதில்லை. இதுவும் தேகத்திற்கு உஷ்ணத்தை உண்டுபண்ணும்படியான பதார்த்தம்.

சிறு கதை

சிங்கத்தின் பங்கு (Lion's Share)

(M. B. S. G.)

ஒரு காட்டில் ஒரு சிங்கம், புலி, நரி, வெள்ளாடு முதலியன சிநேகமாயிருந்தன. இவர்களுக்குத் தலைவன் சிங்கம், எல்லோரும் ஒன்று சேர்ந்து வேட்டையாடியே ஜீவித்துவந்தன. ஓர்

நாள் நெடு நேரம் வேட்டையாடியும் ஒன்றும் அகப்படவில்லை. இவர்களுக்கோ அதிகப் பசியெடுத்துவிட்டது. யாது செய்வ தெனப் புலப்படவில்லை. அப்போது சிங்கம் தன் பலமெல்லாம் கூட்டி ஓர் கர்ஜனை செய்தது. அதனைக்கேட்டுப் பயந்த ஓர் மான் வழிதப்பி அவை இருந்த இடத்தின் பக்கமாக ஓடினது. புலி, நரி, வெள்ளாடு மூன்றும் அதை விரட்டிப் பிடித்துக் கொன்று நான்கு பங்குகள் போட்டன.

பங்குகள் போட்டுமுடியும் சமயம் சிங்கமும் வந்துவிட்டது. முதல் பங்கிடம் போய் என் பெயர் சிங்கம். சிங்கம் என்ற என் பெயருக்கே இம் முதல் பங்கு தகும் என அதைத் தின்றது. பின் இரண்டாவது பங்கிடம் சென்று நான் மிருக இனத்திற் கெல்லாம் அரசன். ஆகையால் இப்பங்கும் என்னைச் சார்ந்ததே என விளம்பி அதையும் உண்டது. மூன்றாவது பங்கை அணுகி நான் எல்லோரிலும் வலிமையுடையவன். ஆகையால் இதுவும் என்னுடையது. இன்னும் ஓர் பங்குதான் உண்டு. அதை எவ னுவது தொட்டால் அவனை ஒரே அடியாய் அடித்துக் கொன்று விடுவேன் என்று முன்னைவிட ஒரு பலத்த கர்ஜனை செய்தது. தோழர்கள் மூவரும் தப்பித்தோம், பிழைத்தோம் என காற்றி னும் கடுகிய வேகமாய் ஓடி பசியின் அகோரத்தால் உயிரை நீத்தன.

“ஆகையால் உன்னிலும் பல்வானேடு உறவாடாதே”

யோசனைக் கணக்கு

1. என் தகப்பனுருக்கு என்னைக்காட்டிலும் 40 வயது அதிகம். 7 வருஷங்களுக்குமுன்னல், என்னைப்போல் என் தகப் பனர் 3 மடங்கு வயதுள்ளவரென்றால், எங்களுடைய தற்கால வயது என்ன? A. Devanesan, *E. 2 A.*

2. 40 வீசையுள்ள இரும்பை நான்கு படிக்கல்லாக அடிக்கவேண்டும். எத்தனை வீசைக்குச் சாமான் கேட்டாலும் அந்த படிக்கல்லைக்கொண்டு நிறுத்துத்தரவேண்டும். எப்படி?

S. Joseph Jaganathan,
VIII Std. Poothampatty.

இயற்கைப் பாடம்

(K. S. Antonisamy)

மோச்சை-அவரை சம்பாஷணை

மோச்சை : அவரையண்ணே சௌக்கியந்தானா?

அவரை : மொச்சையண்ணா சௌக்கியந்தான். ஆனால் என்ன நீங்கள் ஒரு மாதிரி சோர்ந்தாப்போல் தெரிகிறதே.

மோச்சை : என்ன அண்ணே செய்கிறது. நான் இருக்கக்கூடிய இடம் அப்பேர்ப்பட்ட இடமாக இருக்குது. ஒன் பாடு தேவலண்ணே.

அவரை : என்னப்பா ரொம்ப சலிப்பு. நீ இருக்கிற இடத்திற்கு என்னக் குறைச்ச.

மோச்சை : அதையாண்ணே கேக்குறே. ஒனக்குண்ணா நல்ல இடம். கேணி, ஏரி தண்ணீரெல்லாம் உன் காலில் விழுகிறது. என்க்கோ அந்த மேகம் பார்த்து என் மீது இரக்கம் கொண்டு கொடுத்தால்தான். இடமோ சொல்லவேண்டியதில்லை, மானம்பார்த்த காடு. மழை இல்லாத சமயத்தில் வாடி வதங்கி சில சமயங்களில் மற்ற என் தோழர்கள் பட்டுப்போவதும் உண்டு. இன்னும் நான் இருக்கும் இடத்தைச்சுற்றி சரியான வேலிகள் அமைக்காததால் என்னை ஆடு, மாடுகள் சிரச்சேதம் செய்வது உண்டு. ஆகையால் என் நிலைமை எவ்வளவு பரிதாபமாயிருக்கிறது. சரி. அண்ணே உன் இருப்பிடத்தைப்பற்றி சொல்லு பார்ப்போம்.

அவரை : நான் இருக்கும் இடம் எப்பேர்ப்பட்ட இடமாய் இருக்கவேணுமென்று என்னைப் பார்த்தாலே தெரியும். நான் உன்னைப்போல் வாட்டமுற்று இருக்கவில்லை. நான் இருக்கும் இடம் தோட்டமும், வீட்டின் சுற்றுப்புறங்களிலும் இருப்பேன். தண்ணீருக்கு எனக்கு பஞ்சம் கிடையாது. மேலும் நான் அதிக கொடியாக படருவதால் எனக்குப் பந்தல்போட்டு அதின் மேலே படரவிடுகிறார்கள். என்னைச்சுற்றி அடைப்புகள் இருக்கும். அதனால் ஆடு மாடுகள் சிரச்சேதம் செய்வதில்லை. இவ்வாறு நான் எவ்வளவோ பத்திரமாக இருந்தும் என்னை சாப்பிட்டு நாசமாக்குவதற்கு அசுவணி என்ற ஒருவித பூச்சி வந்துவிடுகிறது.

மோச்சை : கொஞ்சம்பொறு. நான் சொல்வதைக் கேளும். அண்ணே! உன்னைமட்டும் பூச்சிகள்வந்து சாப்பிடு கிறது என்று எண்ணவேண்டாம். என்னையும் சில புழுக்கள் வந்து தின்று நாசப்படுத்துகின்றன. ஆனால் உனக்கு பூச்சி வந்துவிட்டாலோ சாம்பலைக்கொண்டுவந்து செடியில் இறைத்து அவற்றைப் போக்குகிறார்கள். ஆனால் என்னை ஒருவரும் சட்டை பண்ணுவதில்லை. புழுக்கள் சாப்பிட்ட செடிகள்போக எஞ்சி யுள்ளவைகள்தான் பயனளிக்கின்றன.

அவரை : அவ்வாறு இருந்தும் நீங்கள்தான் மானிடர் களுக்கு அதிக ஊதியத்தைபெறச் செய்கிறீர்கள். (விலை 2 அணு வுக்கு சின்னபடி $1\frac{1}{4}$ அல்லது $1\frac{1}{2}$ படி விதை) நான் கொடுக்கும் பலனை அப்போதைக்கப்போதே தீர்த்துவிடுகிறார்கள். இதில் அதிகம் பணத்திற்கு வழியில்லை.

மோச்சை : என்னிடமுள்ள வித்தை சேகரிப்பதற்குள் காய்களை நன்றாக வெயிலில் காய்ந்து நெற்றாகும்படி விட்டு விடு கிறார்கள்.

அவரை : அப்போதுதான் வித்துக்கள் நன்றாக முற்றி யிருக்கும். அதைத்தான் ஜனங்கள் வாங்குவார்கள்.

மோச்சை + அவரை : நாம் இருவரும் ஒரே இனமாக இருந்து எவ்வளவோ கஷ்டப்பட்டு மானிடருக்கு பயனை அளிக் கிறோம். ஆனால் அதனால் நமக்கு ஒன்றும் பிரயோஜனமில்லை. சில சமயங்களில் அவர் நம்மைக் கவனிப்பதுகூட இல்லை. சரி. அண்ணே நேரமாகிறது சென்று வருவோம்.

குடியானவர்களுக்கான பழமொழிகள்

(U. Arokiam)

1. சித்திரை எள்ளைச் சிதறி விதை.
2. வைகாசி எள்ளை வரப்பிலும் கொட்டு.
3. ஆனிக்கார் மூலதனம்.
4. ஆடிவிதைத் தேடியிடு.
5. ஆவணிக்கார் பூசனிப்பூ.
6. புரட்டாசி சம்பா நடவு பொன்போல் விளையும்.
7. ஐப்பசிவிதைப்பாட்டில் ஆனைக்கொம்பு முளைக்கும்.
8. கார்த்திகைக்குப்பின் மழையுமில்லை, கர்ணனுக்குப் பின் கொடையுமில்லை.

9. மார்கழிமாதக் குளிர் மாடு மக்களுக்குப் பீடை.
10. தைபிறந்தால் வழிபிறக்கும்.
11. மாசிப்பனி மலையையும் உருட்டும்.
12. பங்குனி மழை பத்தெட்டுவகைக்கும் சேதம்.
13. காலத்துப்பயிர் கரம்பிலும் விளையும்.
14. கொம்பால் ஒரு நெல் ஆனாலும் சம்பாவாகாது.
15. இளைத்தவன் எள்ளை விதை; கொழுத்தவன் கொள்ளை விதை.
16. நட்டகேழ்வரகு நடுவீட்டிலே.
17. பயிரைக் கொடுத்து பழஞ் சேற்றை வாங்கு.

யுக்திக்கணக்கு, யோசனைக்கணக்கு விடைகள்

(கொத்து 33, மலர் 3, பக்கம் 63.)

யுக்திக்கணக்கு விடை: **173**. இவ்விடையளித்தவர்கள்: 1. P. Arokiasamy Pillai, R. C. School, Krishnapuram. 2. S. Joseph Raj Simson, Lab. School, Sanapiratti. 3. S. Mariasusai, Lab. School, Elamanur. 4. A. Irudayasami, Lab. School, Kottaiyur, Thuraiyur Post. 5. A. Rajoo, Lab. School, Neikuppai. 6. V. S. Susai, R. C. School, Thondamanthurai. 7. V. Seshayya. H. M., Bd. School, Chettykulam. 8. R. Gnanapragasam, E. 1 B. 9. A. Asirvatham, E. 2 B. 10. D. Siluvaikitherian, E. 1 A. 11. G. Dharmanathan, E. 1 A. 12. L. Selvaraj, E. 1 A. 13. I. Susaipragasam, E. 1 A. 14. V. Rajagopalan, Naranamangalam. 15. G. R. Lawrence, Molaguparai. 16. S. Arokiasamy, R. C. School, Sempet. 17. S. Sengol, E. 1 A. 18. N. Mudiappan, St. Mary's El. Sch., Trichy. 19. M. Lingiah, H. M., L. F. School, Thoraipatty, Ooty.

யோசனைக்கணக்கு விடை: **301**. இவ்விடையளித்தவர்கள்:—

1. P. Arokiasamy Pillai. 2. S. Joseph Raj Simson. 3. A. Irudayasami. 4. Seshayya. 5. R. Gnanapragasam. 6. A. Asirvatham. 7. D. Siluvai Kitherian. 8. G. Dharmanathan. 9. L. Selvaraj, E. 1 A. 10. I. Susaipragasam, E. 1 A. 11. V. Rajagopalan. 12. S. Sengol, E. 1 A. 13. N. Mudiappan, St. Mary's El. School, Trichy. 14. M. Lingiah, H. M., L. F. School, Thoraipatty, Ooty.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

2—10—42. இன்று நமது மாதிரிப் பாடசாலையில் அர்ச். ஞானப்பிரகாசியாரின் பாதுகாவலில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் காவல் சம்மனசு சபையின் வருடாந்தர விழா கொண்டாடப்பட்டது. காலை 7¼ மணிக்கு சங். தனசாமி S. J. அவர்களால் ஆடம்பரமாய் திவ்ய பலிபூசை நிறைவேற்றப்பட்டு, 22 பேர் புதிதாய் சபையிலும், 32 பேர் சோதனையிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். மாலை 4-30 மணிக்கு அன்னவரின் தலைமையில் வருடாந்தர வைபவம் நடைபெற்றது. அவ்வமயம் "காவல் சம்மனசு நமது ஆப்த நண்பன்" என்னும் ஒரு சிறிய நாடகம் நமது பிள்ளைகளால் அதிவிமரிசையாக நடித்துக் காண்பிக்கப்பட்டது. அதன் முடிவில் சங். அக்ராசனாதிபதியவர்கள் அந்நாடகத்திலிருந்து படித்துக்கொள்ளவேண்டிய போதனைகளை விளக்கி அதை மெச்சினார்கள். தலைமை ஆசிரியர் சங். லூர்து சாமி B.A., L.T. அவர்களின் முடிவுரைக்குப்பின் பாப்பரசர் வாழ்த்து பாடப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது.

3-10-42. பேச்சுப்போட்டி. இன்று மாலை சங். தலைமை ஆசிரியர் அவர்களின் அக்கிராசனத்தில், நமது பாடசாலை மாணவர்களைக்கொண்டு பேச்சுப்போட்டி நடைபெற்றது. ஸெக்கண்டரி கிரேடு மாணவர்கள், எலிமெண்டரி கிரேடு மாணவர்கள் இவர்களில் 7 பேர் ஷ பேச்சுப்போட்டிக்குப் பெயர் கொடுத்திருந்தனர். ஒவ்வொருவருக்கும், சீட்டுக்குலுக்கி, பேசுவதற்கான, ஒரு பழமொழி கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பழமொழி. அதைப்பற்றி 5 நிமிஷம்தான் பேசவேண்டும். ஒவ்வொருவருக்கும் பேச்சு தயாரிக்க 10 நிமிஷங்கள் அவகாசம் கொடுக்கப்பட்டது.

இவ்விதம் ஷ 7 பேர்களும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. பேச்சின் திறமையை நிர்ணயிக்க ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். பேசினவர்களுள் மிகத் திறமையாகப் பேசினவர் யார் எனப் பிறகு சங். தலைமை ஆசிரியரால் தெரியப்படுத்தப்படும் என்றும், அன்னவருக்கு நம் பாடசாலைத் தினத்தன்று பரிசு (மெடல்) அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

ஸெக்கண்டரி கிரேடு, பழைய மாணவர் ஜார்ஜ் ஸிட்னி என்பார், பேச்சுப் போட்டியில் முதன்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு மெடல் ஒன்று பரிசளிப்பதாக வாக்களித்திருக்கிறார். ஷ போட்டியில் பேசினவர்களுக்கும், பரிசளிக்க வாக்களித்த ஷ மாணவர்களுக்கும் சங். தலைமை ஆசிரியர் நன்றி கூறினர்.

பெற்ருேர் சங்கங்கள்

14–9–42-ல் திருச்சி தாலுக்கா செம்பட்டு R. C. மிஷன் பாடசாலை பெற்ருேர் சங்கக்கூட்டம், டெப்யூடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ R. சுப்பிரமணியம் அய்யர் அவர்களது தலைமையின்கீழ் நடைபெற்றது. தலைவரவர்கள் பெற்ருேர்களின் கடமைகளையும், பெண் கல்வியின் அவசியத்தையும்பற்றிப் பேருரையுரைத்தபின், சிறுவர்களது ஆடல் பாடல்களோடு நிகழ்ச்சிகள் நிறைவேறின.

(M. J. Francis, H. M.)

19–9–42-ல் துறையூர் சாரதாவித்தியா பாடசாலையில் கூட்டம் கூடியது. சிறுவர்களது ஆடல் பாடல்கள் அனைவர்க்கும் மகிழ்ச்சியளித்தது. பெற்ருேர் கடமைகளைப்பற்றி சொற்பொழிவு நிகழ்ந்தது. வந்தனோபசாரங்களோடு சங்கம் இனிது கலைந்தது.

காரியதரிசி :—P. Arokiasamy Pillai.

திருச்சி, அர்ச். ஆரோக்கியமாதா கோவில் ஆண்பாடசாலை குருளையர் இயக்கம்

28–8–42-ல், ஷை குருளையர் சார்பாகத் தலைமையாசிரியர் திரு. A. அருள்சுவாமி அவர்கள் சங்கம் நடத்தினர். சாரணியக் கத்தைப்பற்றி திரு. M. J. செபஸ்தியான் அவர்கள் பேசினர். குருளையர்களின் விளையாட்டுகள் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்தன. தலைவரது முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

N. Mudiappan, குருளை ஆசிரியர்.

வேடிக்கைக்கணக்கு !

45-லிருந்து 45-ஐ எடுத்துவிட்டால், மீதி 45 ! எப்படி ?

பாருங்கள் !	987654321	கூட்டுத்தொகை	**45**
	123456789	,,	**45**
	864197532	,,	**45**

A. Rajoo, H. M. Lab. School,
Neikuppai.

பாலர் ஸங்கீதம்

- (Moral Instruction)

(A. Gnanadickam, *South India Music School*, Ootacamund.

துஷ்டப் பிள்ளையின் செய்கை

இராகம் : சுருட்டி] (*மாற்றறியாத*) [*சாபு*

கண்ணிகள்

1. *காலை ளமுந்துக டவுளைத் துதியா*
   காலைக்க டன்களை சீக்கிரஞ் செய்யா
   வேலையிட் டால்செய்ய விருப்பமுங் கொள்ளா
   வேண்டாக்கா ரியத்தை வீணுக்கெ டுக்கும்
   மாலைவ ரைசெய்வி ஷயங்கள் எண்ணு
   மனதிலும் வையாது கடுந்துஷ்டப் பிள்ளை.
2. *துஷ்டப்பிள் ளைநிதம் பள்ளிக்கும் போகா*
   போனாலும் நேரம்மு டிந்தபின் போகும்
   இஷ்டம்போல் எங்கும்வி ளையாடும் பாடம்
   எழுதிப்ப டிக்காமல் இருக்கும்வ குப்பில்
   நஷ்டம்ப லவர நடிக்கும்அ டிக்கும்
   நாளும்ஆ சிரியர் சொல்லைக்கே ளாது.
3. *கேளாது அகத்திலும் விஷமங்கள் செய்யும்*
   கேவல மாய்த்தந்தை தாயையும் பேசும்
   நாளும்உ டல்ஆடை சுத்தஞ்செய் யாது
   நகங்கள்வ ளர்த்துவி ரல்வாயில் வைத்து
   வாழக்காண் மக்களால் வரும்லாபம் துன்பம்
   வாந்திசெய் வோர்போலும் வெறுப்பரே ஐயோ!
4. *ஐயோ! பொய் களவு சூதுவி ரும்பும்*
   அரும்உயிர் போனாலும் மெய்யேபே சாது
   செய்கரு மங்களில் சேதம்வி ளைக்கும்
   செய்ததை இல்லையென க்ஷணத்தில் மறைக்கும்
   பையவிட் டால்அந்தோ! பாதகம் சேதம்
   பார்த்தவு டன்தண்டி பரிதாபம் வையா.
5. *வையும்வ ளனம்செய்யும் வயதானப் பெரியார்*
   வாமஅன் னைபிதா வாத்தியார் இதரர்
   செய்தொழில் போலும்சி றிதும்கோ ணாமல்
   செய்துப ழிக்கும்பெற் றோர்க்கும்மற் றோர்க்கும்
   வையம்கெட் டபெயர் வாங்கிமு டிசூட்டும்
   வரும்துன்பம் கொடிதுகொ டிதுதம் வீட்டில்.

6. வீட்டில்பெற் றோர்மிக வெறுப்புற்றுப் பள்ளி
விட்டும்ப லகஷ்டம் பன்னாளும் பட்டும்
காட்டிலும் மேட்டிலும் காண்பார்வெ றுத்துக்
காரணத் துடன்நய்யப் புடைக்கத்தம் மேனி
கூட்டுடன் உயிர்போகாக் குறையொன்று ஒன்றே
குணப்படாப் பிள்ளைகள் குறும்புள்ள துஷ்டர்.

7. துஷ்டப்பிள் ளைபோலும் வாழாதே! தினமும்
துஷ்டரைக் கண்டாலும் தூரவி லகு
இஷ்டத்தாய் தந்தைசொற் படிசதா நடந்தால்
எல்லாரும் உனைப்போற்ற இனிதாய்உ லகில்
கஷ்டநஷ் டமின்றி கண்யநல் வாழ்வே
காணுவாய் தெய்வருள் கடாக்ஷம் நீள்க.

ரீ, மா மா ‖	பா, பாபா ‖	பபா பாபா ‖	மபத மரீ, ‖
கா, லை எ ‖	ழுந், துக ‖	ட வுளைத் ‖	துதி. யா, ‖
ரிமா ரீஸா ‖	ஸா, ஸாஸா ‖	ரீ, மாமா ‖	பா, பாபா ‖
கா. லைக்க ‖	டன், களை ‖	சீ, க்கிரம் ‖	செய், யா. ‖
ரீ, மாமா ‖	பா, பாபா ‖	பபா பாபா ‖	மபத மரீ ‖
வே, லைஇட் ‖	டால் செய்ய ‖	விருப் பமுங் ‖	கொ...ள்ளா ‖
ரிமா ரீஸா ‖	ஸா, ஸாஸா ‖	ரீ, மாமா ‖	பா, பாபா ‖
வே. ண்டாக்கா ‖	ரி, யத்தை ‖	வீ, ணைய்க்கெ ‖	டுக், கும். ‖
,ஸ்ா நீதா ‖	பதா மாபா ‖	பா, நீ நீ ‖	ஸ்ா, ஸ்ாஸ்ா ‖
,மா லைவ் ‖	ரை செய்வி ‖	ஷ, யங்கள் ‖	என், ணு ‖
நிநீ நீ நீ ‖	நிநீ ஸ்ாரீ. ‖	ஸ்நீ தாபா ‖	மபா ரீ ; ‖
மன திலும் ‖	வை. யாது ‖	கடுங் துஷ்டப் ‖	பி. ள்ளை ‖

இவ்விதமே மற்ற அடிகளையும் பாடிக்கொள்க.

விகடக்கோத்து

(வாசகசாலையிலிருந்து வீடுதிரும்பும் இரு நண்பர்கள்)

ஒருவர். உமக்கு ஞாபகசக்தி ரொம்ப குறைவு. நீர் அங்கே மறந்து வைத்துவிட்ட உம் புத்தகத்தையும் என் புத்தகத்தையும் நானே போய் எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்.

மற்றவர். நீரும் அங்குபோகும்போது புத்தகமே கொண்டுபோகவில்லையே!

(R. Arulanandam, Gabrielpuram.)

182301
சென்னை-600 008

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற
சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு 0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
   1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
   6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
6. கர்னாடக சங்கீத போதினி (4-ம் பாகம்)
   ஆசிரியர்களுக்கும், ஆசிரிய மாணவர்களுக்கும் ... 0—8—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School, St. Thomas Church Rd.
OOTACAMUND.

அறிவிப்பு

எப்பேர்ப்பட்ட ரணங்களையும் கலங்கச் செய்யும் சங். கவுசானல் சுவாமி பிளாஸ்திரி ¼ பௌண்ட் 1¼ ரூ. பல்லறணை, கட்டி, பல்லைப்பற்றிய சகல நோய்க்கும் பல் நோய்த்தூள், அசைகிற பல் வலுவடையும்–டின் 12 அணா. தேள் விஷநிவாரணி அற்புதக்குணமளிக்கும்–புட்டி 1-க்கு விலை 2½ அணா.

சகல இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

விபரங்களுக்கு :—

மேஸ்மேரிக் ஹோம்,

தூத்துக்குடி.

Reg. No. M. 1534.

OUR EMPLOYMENT BUREAU

FOR

Trained Teachers In Need Of Employment.

Managers Of Schools In Need Of Trained Teachers.

WANTED 2 Secondary Grade trained teachers immediately on Rs. **22** each, one as Headmaster, the other as assistant of a Higher Elementary School. Houses will be supplied free of rent.

Apply: THE MANAGER,
H. E. School, Thethakudi P. O.,
(*Via*) **Vedaraniyam, TANJORE Dt.**

WANTED one Secondary and Higher Grade trained teachers. Salary decent according to qualifications and experience.

Apply: THE MANAGER,
R. C. Schools, Vembar,
(*Via*) **Vilatikulam, TINNEVELLY Dt.**

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.